033

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNU 5237/ESU3137- விசேட தேவைகள்சார் கல்வியின் சமூகவியல் அடிப்படைகள்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 01.08.2021 நேரம் : மு.ப 09.30 - ந.ப 12.30

## பகுதி I

1. "ஓர் குறிப்பிட்ட சமூகமொன்றின் விழுமியங்கள்சார் பிரதிபலிப்புக்கள் நியமங்கள் ஆகும்." இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக.

2. சிறுவர்களின் சமூகமயமாக்கல் தன்மையை அளவிடுவதற்கு முறைசாரா முறையில் சமூகத்தினால் பயன்படுத்தப்படும் அளவு கோல்கள் மூன்றினை (03) விளக்குக.

3. விசேட கல்விசார் தேவைகளுடைய சிறுவர்களின் சமூகமயமாக்கலில் ஓர் குடும்பத்தில் சில உடன்பிறந்தோர் முக்கிய காரணியாக விளங்குகின்றனர். மேற்கூறப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கு மூன்று (03) காரணங்கள் தருக.

4. விசேட கல்விசார் தேவைகளுடன் கூடிய பிள்ளையுடன் தொடர்புபட்ட வகையில் முறைசார் மீள் சமூகமயமாக்கல் (Formal re socialization) எனும் பதத்தினை உதாரணங்களுடன் விளக்குக.

5. இலங்கையில் குழந்தை வளர்ப்பு நடைமுறைகளில் பால்நிலை வேறுபாடுகளுடன் தொடர்புபட்ட வகையில் இனங்காணப்படுகின்ற நியமங்கள் யாவை?

6. சக ஒத்துழைப்பு (Peer-collaboration) என்பதனால் நீர் கருதுவது யாது?

7. விசேட கல்விசார் தேவைகளுடைய சிறுவர்கள் ஊடக (Media) அடிமையாதலுக்கான காரணங்கள் ஐந்தினை (05) விளக்குக.

8. "விசேட கல்விசார் தேவைகளுடைய சிறுவர்களின் சமூகமயமாக்கலில் செங்குத்தான அத்துடன் கிடைமட்ட ஆகிய இரு கருக்குடும்ப விரிவாக்கம் பயனை பெற்றுத்தரக்கூடியது" இக்கூற்றினை நியாயப்படுத்துக.

(8 x 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. i. விசேட தேவைகள்சார் சிறுவர்களின் பெற்றோர்கள் அவர்களது சிறுவர்களை சமூகமயமாக்குவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அத்துடன் சிக்கல்களை உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. விசேட கல்விசார் தேவைகளுடன்கூடிய சிறுவர்களின் பெற்றோர்கள் அவர்களது சிறுவர்களை சமூகமயமாக்குவதற்கு பயன்படுத்தும் உத்திகள் யாவை?

(10 புள்ளிகள்)

10. i. பொறுப்புகள் அல்லது வகிபங்கினை ஏற்று செயல்படும் நடத்தை கீழ் குறிப்பிடப்படும் வகைபாட்டிற்குட்பட்ட சிறுவர்களுக்கு எந்த அளவிற்கு சசவால்மிக்கதாக காணப்படுகின்றது.

a) பார்வை திறனற்ற சிறுவர்கள் (Blind Children)

b) அறிவுசார் குறைபாட்டுடன்கூடிய சிறுவர்கள் (Children with intellectual disability)

(10 புள்ளிகள்)

ii. ஓர் ஆசிரியராக மேலே குறிப்பிட்ட சிறுவர் பிரிவினரின் பொறுப்புகளை ஏற்று நடத்தலில் எவ்வாறு தலையிடுவீர்.

(10 புள்ளிகள்)

11. i. இடங்கொடுக்கிற அல்லது அனுமதிவழங்கும் (Permissive indulgent) குடும்பங்களிலிருந்து வரும் சிறுவர்கள் கீழ் குறிப்பிடப்படுகின்ற வேறுபட்ட நடத்தை முறைகளை கொண்டு காணப்படுவார்கள்.

குறைந்த சுயகட்டுப்பாடு, ஏமாற்றங்களை கையாள்வதில் குறைவான திறன்கள், பொறுப்புக்களை கையாள்வதில் குறைவான திறன்கள்

மேலே குறிப்பிட்ட பெற்றோர் (இடங்கொடுக்கிற அல்லது அனுமதிவழங்கும்) பாணியில் காணப்படும் சிறுவர்களிடத்தில் காணப்படும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பண்புகளை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

ii. ப்ரான்.ஃ.பென் பர்னர் (Bronfenbrenner) என்பவரிற்கிணங்க, குழந்தை வளர்ப்பு நடைமுறைகளில் சமூக வகுப்பின் தாக்கத்தை விளக்குக.

(10 புள்ளிகள்)

12. i. சககுழுக்களை நிராகரித்தல் விசேட தேவைகளுடைய சிறுவர்களின் ஆளுமை விருத்தியில் நீண்ட தாக்கத்தை ஏற்படுத்தும்
இக்கூற்றினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

ii. மேற்கூறப்பட்ட கூற்றினடிப்படையில் விசேட தேவைகளுடைய சிறுவர்களின் அறிவுசார், சமூக அத்துடன் மனவெழுச்சிசார் விருத்தியின் மீதான தாக்கத்தை ஆராய்க.

(10 புள்ளிகள்)

13. i. சமூகமயமாக்கல் என்பதன் அடிப்படையில் பாடசாலைகளில் வழங்கப்படும்விசேட கல்விக்கு மாறான உட்படுத்தல் (Inclusive) கல்வியின் நன்மைகளை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

ii. உட்படுத்தல் கல்வியினூடாக விசேட தேவைகளுடைய சிறுவர்களின் சமூகமயமாக்கலை நீர் எவ்வாறு வசதியுடையதாக்குவீர்.

(10 புள்ளிகள்)

14. i. சிறுவர்களின் நேர் சமூகப் பெயர்ச்சியில் (Positive social mobility ) செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. மேற்கூறப்பட்ட காரணிகளுள் இரண்டினை (02) தெரிவு செய்து, அவை எவ்வாறு விசேட கல்விசார் தேவைகளுடைய சிறுவர்களின் நேர் சமூக பெயர்வில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*